## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான

நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் அல்லாது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய பெறப்பட்ட வட்டி வருமானமானது ரூபா 3,884,687 ஆல் குறைக்கப்பட்டும் மீள் முதலீடுகளின் காசு உட்பாய்வுக்கும் காசு வெளிப்பாய்வுக்கும் இடையிலான வித்தியாசத்தின் நிகரப் பெறுமதி ரூபா 295,637,270 ஆகவும் திறைசேரி உண்டியல்களின் மீதான முதலீடுகள் மற்றும் நிலையான வைப்புக்களின் மீளப்பெறல்கள் என்பன முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் அரைகுறை இருப்பான ரூபா 61,890,191 தொகை மற்றும் வழங்கப்பட்ட இடர்கடன் ரூபா 7,832,590 என்பன முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்படல் வேண்டியதுடன் மற்றும் மீள் அறவிடப்பட்ட இடர்கடன் ரூபா 5,044,506 காசு உட்பாய்ச்சலாக காட்டப்பட வேண்டியதுடன் இவை முறையே ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களுடன் மற்றும் ஊழியர்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவை என்பவற்றுடன் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்திற்கான வட்டி வருமானம் ரூபா 128,314,211 மற்றும் காசாகப் பெறப்பட்ட தொகை ரூபா 3,884,687 ஆனது தொழிற்படு மூலதனத்தில் மாற்றமாகக் காட்டப்பட்டிருந்தது. அரை குறை இருப்புக்களான காசு வெளிப்பாய்ச்சல் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களைக் கொள்வனவு செய்தமைக்காகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் இடர்கடன் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் என்பன ஊழியர்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது நியமங்களின் பிரமாணங்களுக்கமைவாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 80 (ஆ) பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 8 இன் 36 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் கடந்த வருடத்தின் மிகை ஒதுக்கம் செய்யப்பட்ட ரூபா 48,200,475 | வருமான வரி மிகை ஒதுக்கமானது கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும் | நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமான வரி காரணமாக மீளாய்வாண்டிற்கான வரிக்குப் பின்னான இலாபம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் வரிச் செலவுகளில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக கடந்த வருட சீராக்கமாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் கிரயம் ரூபா 103,032,087 ஆன முழுமையாக தேய்மானமிடப்பட்ட 26 வாகனங்கள் தொடர்ந்தும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 8 இன்படி திருத்தம் செய்து சாதாரண பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் இல. 16 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தின் கிரயத்தினைக் காட்டுவது நிறுவனத்தின் கொள்கையாகும். எனினும் 2018 இன் போது வாகனங்களுக்கான மீள் பெறுமதியிடல் தொடங்கப்பட்ட போதும் இரு வாகனங்களின் பெறுமதியானது பெறுமதியிடல் திணைக்களத் திடமிருந்து ஆண்டிறுதியின் போது பெறப்பட்டிருக்க வில்லை. ஆகவே மீள் பெறுமதியிடப்பட்ட வாகனங்களின் மீள் பெறுமதித் தொகை மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட இரு வாகனங்கள் சம்பந்தமாகவும் கணக்கீட்டு நிரல் (3) இல் இணைப்புக்களாக காட்டப்பட்டிருந்தது. | நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 37 இற்கு இணங்காது வேலையாட்களின் நட்டஈட்டுத் தொகையான ரூபா 5,800,000 ஆனது உண்மையான மதிப்பீட்டினை நிச்சயமாக இனங்காணப்படாது நிகழத்தக்க பொறுப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் சட்ட அலுவரினால் வழங்கப்படும் எழுத்து மூல உறுதிப்படுத்தலின் அடிப்படையிலேயே நிகழத்தக்க பொறுப்புக்களுக்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. | நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கையின்படி ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் மற்றும் கட்புலனாகா சொத்துக்கள் முன்கொண்டு செல்ல வேண்டிய பெறுமதியை மீளாய்வு செய்து கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்படுவதாக காட்டப்பட்டிருந்த போதும் அவ்வாறு மீளாய்வு செய்யாது ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம், பெற வேண்டிய மீதிகள், வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் வேறு சொத்துக்கள் என்பன பொருட்டு சேதமாக்கும் நட்டங்களாக மொத்தம் ரூபா 5,976,657 இற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2018 ஆம் வருடத்தின் போது கட்புலனாகாச் சொத்துக்கள், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான சேதமாக்கும் நட்டங்கள் தொடர்பான தகவல்கள் அறிக்கையிடப்படாமையால் அந்த நிலுவைகள் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | நியமங்களின் பிரமாணங்களுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 61 ஆம் பிரிவிற்கு இணங்க வருமானவரிச் செலவினத்தின் கீழ் ரூபா 22,364,664 ஆன மேலதிக வரிச் செலவினம் காட்டப்பட்டிருந்த போதிலும் அது 2018 ஏப்ரல் 01 இற்குப் பின்னர் உரித்துடையதாக மாட்டாது. இதனால் அக் குறிப்பிட்ட தொகையால் இலாபம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் மற்றும் வரிப் பொறுப்புக்கள் மிகைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் 2018 ஏப்ரல் 01 இற்குப் பின்பு வெளியானதால் ரூபா 22,364,664 ஆன தொகை 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு வருடத்திற்கான வரிச் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சரியான வருமானவரியானது கணக்குகளில் சீராக்கப்படும். | வருமானவரியை சரியாகக் கணக்கீடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச்சட்டம் | | | |
| (i) | 15(1) ஆம் பிரிவு | இரத்தினக்கல் கைத்தொழிலைச் செய்வதற்கான உரிமத்தை வழங்கும் நிறுவனமாக அதிகாரசபை இருந்த போதிலும் இரத்திக்கல் அகழ்வதற்கான 3 செயற்றிட்டங்கள் உரிமம் எதுவும் இல்லாமல் அதிகார சபையினால் செயற்படுத்தப் படுகின்றன. | இச் செயற்திட்டங்களானது தரப்பினருக்கிடையிலான உடன்படிக்கையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களாகும். இச் சந்தர்ப்பத்தில் உடன்படிக்கையானது சட்டப்பெறுமதி உடையதாகையால் அது உரிமமாகக் கருதப்படுகின்றது. 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டத்தின் 18.2 ஆம் பிரிவின் பிரகாரம் அரச உரித்துரைடய காணிகளில் இரத்தினக்கல் அகழ்வதற்கான உரிமையானது ஏலவிற்பனை மூலம் அல்லாது வேறு வழிகளிலும் பெற்றுக்கொள்ள முடியுமென்பது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. | சட்டத்தின் பிரமாணங்களுடன் இணங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 15(2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரீட்சித்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் என்பவற்றுக்காக இயங்கிவரும் தனிப்பட்ட ஆய்வுகூட நிலையங்களை பதிவு செய்வதற்கும் மற்றும் ஒழுங்கமைப் பதற்குமான நடைமுறைகள் காணப்பட்டிருக்க வில்லை. | உரிமமின்றி இயங்கிவரும் ஆய்வுகூடங்களை ஒழுங்கமைப்பதற்கான அடிப்படை மற்றும் முறைமைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. பதிவு செய்வதற்கும் மற்றும் கட்டணம் அறவிடுவதற்குமான சட்டரீதியான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரமாணங்களுடன் இணங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | | | |
| (i) | 6.5.1 ஆம் பிரிவு | அதிகார சபையின் 2018 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. | வரைவு வருடாந்த அறிக்கை மீதான ஆளுநர் சபை அனுமதி பெறப்படுவதற்கு ஏற்பட்ட காலதாமதம் காரணமாக வருடாந்த அறிக்கை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுடன் இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.5.3 ஆம் பிரிவு | 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் 2019 மே 15 இன் போது பாராளு மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. | 2016 ஆம் வருட வருடாந்த அறிக்கை பரராளுமனத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக உள்ளது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுடன் இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 2 ஆம் பந்தி | நிறுவனத் தலைவருக்கு அலுவலக வாகனமொன்று கொடுக்கப்படாது தலைவரது தனிப்பட்ட வாகனம் கடமைகளின் நிமித்தம் உபயோகிக்கப் படுவதால் ஆளுநர் சபையின் அனுமதியுடன் ஒரு மாத்திற்கு ரூபா 200,000 வீதம் 8 மாதங்களுக்காக மொத்தம் ரூபா 1,600,000 ஆன தொகை 2018 மே மாதத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அதிகாரசபையின் குழாமிலுள்ள வாகனமொன்றும் தலைவரது கடமைகளின் நிமித்தம் உபயோகிக்கப்பட்டதுடன் 2018 யூன் தொடக்கம் திசெம்பர் வரையில் 12,838 கிலோமீற்றர் பாவனைக்குட்படுத்தப்பட்டிருந்தது. இவ் வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர் ஓட்டக்குறிப்புக்களில் | தலைவரது அலுவலப் பாவனைக்காக அதிகார சபையினால் வாகனமொன்றை கூலிக்கு அமர்த்துவதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன் கிடைக்கப்பெற்ற விலையான ரூபா 200,000 ஆனது தரம், விலை என்பவற்றை கருத்திற் கொண்டு நோக்கும் போது அதிகமாக இருந்தது. ஆளுநர் சபையின் தீர்மானத்திற்கமைய தலைவரது தனிப்பட்ட வாகனத்தை பாவிப்பதன் பொருட்டு ரூபா 200,000 தொகையானது மாதாந்தம் செலுத்தப்பட்டது. | சுற்றிக்கையின் பிரமாணங்களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கையொப்பம் இட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 3.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது அமைச்சின் செயலாளரின் அனுமதியின்றி 2018 ஆகஸ்ட் 31 தொடக்கம் 4 மாதங்களுக்கு தலைவருக்கு மேலதிக எரிபொருள் வழங்கியமைக்கான செலவாக ரூபா 256,857 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களுக்கு 22 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மேலதிக எரிபொருள் தொடர்பாக ரூபா 241,409 ஆன தொகை கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின்றி செலுத்தப் பட்டிருந்தது. | குறிப்பிட்ட எரிபொருள் எல்லையை விஞ்சியதால் தலைவருக்கான மேலதிக எரிபொருள் படிகள் வழங்குவது தொடர்பில் இயக்குநர் சபையின் அனுமதியுடன் அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இயக்குநர்களின் சொந்த வாகனங்களுக்கான மேலதிக எரிபொருள் படிகள் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியுடன் மீள் நிரப்பப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரமாணங்களுடன் இணங்கியதாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 நவம்பர் 01 ஆந் திகதிய DMS/Policy/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 32 அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்புத் திட்ட நடைமுறைகள் மறுசீரமைக்கப்பட்டு அனுமதிக்கப் படவில்லை. | ஆட்சேர்ப்புத்திட்டத்தை மறுசீரமைப்பதற்கான படிமுறைகள் விரைவில் எடுக்கப்படும் | ஆட்சேர்ப்புத் திட்டத்தை மறுசீரமைத்து அனுமதி பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 திசெம்பர் 26 ஆந் திகதிய DMS/1629/Vol II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | அமைய வெளிக்கள உதவியாளர்களை நிரந்தரமாக்கு வதற்கு திறைசேரி மறுத்திருந்த போதிலும் செயற்பாடல்லாத இரத்தினக்கல் செயற்திட்டங்களில் இணைக்கப் பட்டிருந்த 15 அமைய வெளிக்கள உதவியாளர்கள் அவர்களது பதவிகளில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளனர். | அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட நடைமுறைகளின் பிரமாணங்களுக்கு இணங்க 15 வெளிக்கள உதவியாளர் பதவிக்கு புதிய ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அளிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக ஆட்சேர்ப்பு நடைமுறைகளிற்கிணங்க உள்ளக விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் நேர்முகப்பரீட்சை சபையின் பரிந்துரையுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | திறைசேரியின் அறிவுறுத்தல் களுக்கு இணங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 91,794,389 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 113,338,005 ஆகும். இதனால் நிதி விளைவுகளில் ரூபா 21,585,116 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும், நிர்வாகச் செலவுகள் ரூபா 18,742,306 ஆலும் ஊழியர்களின் கிரயம் ரூபா 7,459,785 ஆலும் மற்றும் மேம்படுத்தல் செலவுகள் ரூபா 68,718,971 ஆலும் குறைவடைந்தமை மற்றும் வருமானம் ரூபா 48,434,206 ஆலும் ஏனைய வருமானங்கள் ரூபா 26,581,296 ஆலும் நிதி வருமானங்கள் ரூபா 2,195,190 ஆலும் குறைவடைந்தமை மற்றும் வருமான வரிச் செலவுகள் ரூபா 39,253,984 ஆல் குறைவடைந்தமை என்பன இவ்வீழ்ச்சிக்கான பிரதான தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்கள், விசேட செயற்திட்டங்கள் மற்றும் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இரத்தினக்கல், இரத்தனக்கல் மணல், இரத்தினக்கல் காணிகள், போன்றவற்றின் ஏல விற்பனை என்பன தொடர்பாக பெறுகை வழிகாட்டிற்கு இணங்கி நடவாமையுடன் இது சம்பந்தமாக வேறு வழிகாட்டிகள் எதுவும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | விசேட செயற்திட்டங்கள் தொடர்பில் வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் எல்லாச் செயற்திட்டங்களும் அவ்வழிகாட்டலின் பிரகாரம் செயற்படுத்தப்படும். | வழிகாட்டிகளைத் தயாரித்து அனுமதி பெறப்படுவதுடன் அவற்றைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வகையில் ஆபரண தொழிநுட்ப அலுவலர்களைப் பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் பின்பற்றுதல் போன்றவற்றில் அதிகாரசபையின் பங்களிப்பானது ஆபரணக் கைத்தொழிலை ஒழுங்கமைப்பதில் குறைவாகவே காணப்பட்டது. | ஆபரணக் கைத்தொழில்களைப் பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்யப்படாத விற்பனை நிலையங்கள் தாக்குதல் செய்யப்பட்டமை ஆபரண கடைகளின் பதிவுகளைக் கூட்டியுள்ளன. | சட்டத்தின் பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உடவளவை நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நன்னீர் மீன் வளர்க்கும் நிலையத்தில் மீன் வளர்ப்புக் குளங்களை அமைக்கும் போது அகற்றப்படுகின்ற குழிகளை அகழ்வு செய்யும் செயற்றிட்டம் பொருட்டு முயற்சியாளரொருவருடன் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்குமான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருப்பினும் அதற்காகக் குறித்த காணியின் உரிமையைக் கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இச் செயற்றிட்டத்திலிருந்து பெறப்பட்ட இரத்தினங்களின் வர்க்கம் மற்றும் அளவுகள் தொடர்பாக அகழ்தல் மட்டத்தின் போது வைக்கப்பட்ட குறிப்புகளுக்கும் இரத்தினக்கல் மதிப்பீட்டின் போதான குறிப்புரைகளுக்கும் இடையே பாரிய முரண்பாடுகள் காணப்பட்டன. மதிப்பீட்டுக்குழுவினால் நீக்கப்பட்ட 88.65 கரட் நிறையுள்ள இரத்தினக்கற்கள் தொடர்பாக அவற்றின் வர்க்கம், நீக்கப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை, நீக்கப்பட்டமைக்கான காரணங்கள் தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஜனவரி 5 ஆந் திகதி தேசிய நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் இடம்பெற்ற அதிகாரசபைக் கூட்டத்தின்போது காணி உரிமையாளரின் விருப்பம் பெறப்பட்டது. குறிப்பிட்ட காணிகளின் குழிகளின் மணலை நீக்குவது தொடர்பாக அதிகாரசபைக்கும் தேசிய நீர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தை 3 மாத காலப்பகுதிக்குச் செயற்படுத்துவதற்கான அனுமதி 2018 பெப்ரவரி 12 ஆம் திகதி பெறப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட அனுமதிகள் பெறப்பட வேண்டியதுடன் செயற்றிட்ட நடவடிக்கைகள் அறிக்கைப்படுத்தப் படல் வேண்டும். |
| (இ) | களணி கங்கைக்கு அருகாமையில் அதிகாரசபையால் செயற்படுத்தப்படும் ஹட்டுவத்தே இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டம் பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இச் செயற்றிட்டம் காரணமாக களனி ஆற்றின் ஆற்றங்கரைகள் மிகவும் கடலரிப்புக்குட்பட்டிருந்த போதிலும் அதை ஈடுசெய்வதற்காக செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியாளரிடமிருந்து பிணை | இச் செயற்றிட்டத்திற்கான நிர்ப்பாசனத் திணைக்களத்தின் குறைவான பரிந்துரை காரணமாக சுற்றாடல் தொடர்பான பரிந்துரைகள் கொடுக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையின் சட்டத்தின் பிரமாணங்களுக் கமைய நேரடி அமைச்சின் செயலாளரினால் | குறிப்பிட்ட அனுமதிகளைப் பெறுவதற்கான படிமுறைகளை எடுப்பதுடன் நீக்கப்பட்ட இரத்தினக்கல் தொடர்பான பதிவுகளைப் பேண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக்களேதும் பெறப்பட்டிருக்கவில்லை. இச் செயற்றிட்டத்திலிருந்து பெறப்பட்ட 1,858.65 கரட் எடையுள்ள இரத்தினக்கற்கள் ஏலவிற்பனையின் போது 4 சந்தர்ப்பங்களில் விலை மதிப்பிடலின் போது பெறுமதியற்றதென நீக்கப்பட்டதுடன் கற்களின் வகை, துண்டுகளின் எண்ணிக்கை, நீக்குவதற்கான காரணம், நீக்கப்பட்ட முறை, அதற்கான அனுமதி என்பன பற்றி அறிக்கையிடப்படவில்லை. | நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மேற்பார்வையின் கீழ் அதிகாரசபையினால் அங்கீகாரமின்றி செயற்படுத்தப்பட்டு வரும் இரத்தினக்கல் அகழ்தல் பிரதேசங்களின் இரத்தின வளங்களை முறையாக அகற்றுவதற்குரிய உடன்பாட்டுடன் இத் திட்டம் செயற்படுகின்றதுடன் ஏல விற்பனையின் வருமானமாக ரூபா 65 மில்லியன் உருவாக்கப்படுகின்றது | |
| (ஈ) | அதிகார சபையின் மேம்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் ஏற்றுமதி வியாபாரம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு 3 உள்நாட்டுக் கண்காட்சிகளும் 3 வெளிநாட்டுக் கண்காட்சிகளும் ரூபா 28,000,000 செலவில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் அவை நடாத்தப்பட்டிருக்கவில்லை. மற்றும் ரூபா 3,690,000 செலவழித்து திட்டத்தில் உள்ளடக்கப்படாத 3 வெளிநாட்டுக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டிருந்தன. பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான போதியளவு முன் ஆயத்தங்கள் மற்றும் ஏற்றுமதியாளரை வெளிநாட்டுக் கண்காட்சிகளில் ஈடுபடுத்தல் என்பன குறைவாக இருந்தமையால் 4 கண்காட்சிகள் தொடர்பாக ஏற்றுமதியாளரால் கொடுக்கப்பட வேண்டியதான ரூபா 3,426,163 தொகை அதிகாரசபையால் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் 2 கண்காட்சிகள் தொடர்பாக மொத்தச் செலவு ரூபா 2,815,000 ஆக இருந்தது. | ஒரு உள்நாட்டுக் கண்காட்சிக்காக மதிப்பிடப்பட்ட தொகை ஒரு கண்காட்சிக்காக பயன்படுத்தப்பட்டது. மிகவும் அதிக செலவு காரணமாக ஒரு உள்நாட்டுக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படவில்லை. ஒரு வெளிநாட்டுக் கண்காட்சி ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கோரிக்கைக்கு இணங்க ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இன்னொரு கண்காட்சியும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னொரு வெளிநாட்டுக் கண்காட்சியின் போது இலங்கைத் தூரத்துடனான ஒருங்கிணைப்புடன் மேம்படுதுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. கண்காட்சிக்கான விற்பனை நிலையங்களுக்கான கட்டணம் அதிகமாக | திட்டத்தின் பிரகாரம் நடைமுறைப் படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருந்தமையால் ஏற்றுமதியாளர்கள் தாம் பங்குபற்ற முடியாதென அறிவித்தமையால் இலங்கை கூட்டங்களுக்கான மேம்படுத்தல் களுக்காக அதிகாரசபை செலுத்த வேண்டி ஏற்பட்டது. மொத்தச் செலவை ஈடுசெய்ய முடியாமல் இருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்றுமதியாளரிட மிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்புக்களைப் பெற முடியாமல் போயிருந்தது. | |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழமொன்றின விரிவுரையாளர் ஓய்வு விடுமுறையில் இருப்பதுடன் அவர் அதிகாரசபையின் தலைவராகத் தொழிற்படும் போது பல்கலைக்கழகத்திலிருந்து சம்பளமும் படிகளும் பெற்றவாறு அதிகாரசபையிடமிருந்து முழுச் சம்பளமும் படிகளையும் பெற்றுக்கொண்டுள்ளார் | 2017 நவம்பர் 24 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவராகத் தொழிற்படுவதற்கான சம்பளமும் படிகளும் மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற மாதாந்தச் சம்பளமும் படிகளும் அதிகாரசபையின் தலைவருக்குக் கொடுக்கப்படுவதுடன் நாம் மேலதிக பணம் எதுவும் செலுத்தவில்லை. | மேலதிக கொடுப்பனவுகள் மீள அறவிடப்பட வேண்டும். |

(ஆ) 2017 யூன் 17 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தலைவருக்கு ரூபா 100,000 ஆன படிகள் மட்டுமே உரித்துடையது என்பதுடன் மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 19,890 ஆன எரிபொருள் படிகளும் அதிகாரசபையின் தலைவராக இருக்கும் நோக்கத்திற்காக உரித்துடையதாகும். இதன் பிரகாரம் 2017 திசெம்பரிலிருந்து 2018 ஏப்ரல் வரையில் ரூபா 542,657 ஆன தொகை மேலதிகமாக கொடுபட்டிருந்தது.

### 3.4 குறைப்பயன்பாட்டுடைய நிதியங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழில்நுட்ப அலுவலர்களிடமிருந்து வருடாந்தப் பதிவுக் கட்டணமாக ரூபா 5,000 ஐ அறவிடுவதன் மூலம் ஆபரண அபிவிருத்தி நிதியம் 2008 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது தொடர்பாக திறைசேரி அனுமதி பெறப்படாமையுடன் நிதியத்தின் நோக்கங்கள், இலக்குகள் என்பன குறிப்பிடப்பட்டிருநக்கவில்லை. | வரவு செலவுத் திடடத்தின் பிரகாரம் குறிப்பிட்ட நிதியமானது 2006 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இவ் வரவு செலவுத்திட்டத்தின்படி இந்நிதியானது ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படும். | நிதியத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுவதுடன் அனுமதி பெறப்படல் வேண்டும். |
| (ஆ) கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வகையில் நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய திட்டம் அல்லது முறைமைகள் காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2018 திசெம்பர் 31 இல் நிதியத்தின் நிலுவையான ரூபா 72,131,745 ஆனது விளைவற்ற வகையில் காணப்பட்டது. | 2017 ஆம் ஆண்டில் இக் குறிப்பிட்ட நிதியத்தைப் பயன்படுத்துவதற்கான விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. | குறிப்பிடப்பட்ட திட்டத்திற்கமைய நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட ரூபா 4,213,289 ஆன பெறுமதியுள்ள உபகரணங்கள், சொத்துக்கள் என்பன ஆபரணச் சங்கமொன்றுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதுடன் இவை பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருப்பதனால் உபகரணங்கள் கொடுக்கப்பட்டதற்கான நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. மேலும் இந் நிதியத்தை பயன்படுத்தி நன்கொடைகளை வழங்குவதன் மூலம் கைத்தொழிலுக்கான பங்களிப்புக்கள் மிகவும் இழிவான நிலையே காணப்பட்டது. | ஆபரண உற்பத்தித் தேவையின் அடிப்படை உபகரணங்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மற்றும் ஆபரண கைத்தொழிலுக்கான தொழிற்நுட்ப உதவிகளை வழங்குவதற்கான ஏனைய தேவைப்பாடுகளுடன் இச் சங்கத்தின் உபகரணங்கள் இவ் வசதிகளைப் பயன்படுத்தி 2018 மே மாத்திலிருந்து ஆபரணங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளனர். | சொத்துக்களை பின்தொடர்ந்து அவற்றை பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டில் ரூபா 8,950,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2017 திசெம்பர் வரையில் 105,502 கிலோமீற்றர் ஓடியதுடன் ஒரு வருடத்துக்கு மேலாக விளைவற்றதாக காணப்பட்டது. இவ் வாகனத்தை உபயோகித்த கடந்த 6 வருட காலப் பகுதியில் ரூபா 4,542,832 செலவிலான 55 பழுதுபார்த்தல்கள் செய்யப்பட்டிருந்தன. | செய்யப்படுகின்ற பெரும்பாலான பழுதுபார்த்தல்கள் முக்கிய திருத்தங்கள் என்பதுடன் அவை மோட்டார் வாகனத்தை ஓட்டும் போது செய்ய வேண்டியவையாக இருப்பதுடன் முகவர்களின் பரிந்துரைகளுக்கேற்ப செய்யப்படுகின்றன. | சொத்துக்களை திறம்பட பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறு முனையத்தின் ஏற்றுமதிச் சேவை நிலையத்தில் ரூபா 1,242,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10,000 பொலித்தீன் பைகளில் 9,740 உம் 40,000 பாதுகாப்புப் பட்டிகளில் 39,740 உம் ஸ்ரிக்கர்களும் ஒரு | முறையான மதிப்பீடொன்று இல்லாமல் அதிகமான ஏற்றுமதிப் பொதிகளை கொள்வனவு செய்வதில் சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தர்களிடமும் விளக்கங்கள் | சொத்துக்களை திறம்பட பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்திற்கு மேலாக விளைவற்றதாக காணப்பட்டதுடன் ஏற்றுமதிச் சேவை நிலையமும் மூடப்பட்டது. | கோரப்பட்டுள்ளது. இப் பொதிகளை மிக விரைவில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி உள்ளோம். | |
| (இ) | ரூபா 13.6 மில்லியன் பெறுமதியில் 2017 இல் ஸ்தாபிக்கப்பட்ட நடமாடும் ஆய்வுகூட நிலையங்களிலிருந்து 2018 சனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான 10 மாதக் காலப்பகுதியினுள் 425 சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் ரூபா 380,180 ஆன தொகை உழைக்கப்பட்டது. நேரடிச் செலவுகள் ரூபா 641,352 ஆகவும் பெறுமாத்தேய்வு ஒதுக்கங்கள் ரூபா 2,844,609 ஆகவும் இருந்தமையால் ஒட்டுமொத்தப் பற்றாக்குறையானது ரூபா 3,105,823 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 99,395 பெறுமதியான கணனி ஒன்றும் ரூபா 7,794,888 பெறுமதியான 2 Energy Dispersine X-Ray Fiuorescence Spectometer உபகரணங்களும் 2 வருடங்களுக்கும் மேலாக பயன்பாட்டின்றி விளைவற்றதாகக் காணப்பட்டிருந்தன. | தற்போது சந்தைகளில் தரக்குறைவான ஆபரணங்கள் சுழற்சிகளில் உள்ளமையால் அவற்றை பரீட்சிப்பதற்காக கண்டுபிடிப்புக் குழுக்களை உபயோகிப்பதற்கு முன்மொழியப் பட்டுள்ளது. இந்தத் துறையில் ஆபரணங்களைப் பரீட்சிப்பதற்கு Hand Held Type EDXRF இயந்திரங்கள் பொருத்தமானது. இதனால் 2 இவ்வியந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வுபகரணங்களின் மூலம் பரீட்சிப்பதற்கான அலுவலர்களை ஈடுபடுத்தல் கடினமானது. | சொத்துக்களை திறம்பட பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அதிகார சபைக்குச் சொந்தமான மாத்தறை, பெலிதெனியவிலுள்ள ரூபா 889,000 பெறுமதியான 80 பேர்ச் காணி மற்றும் அதில் அமைந்துள்ள ரூபா 3,091,861 கழிக்கப்பட்ட பெறுமதியான 3,007 சதுரஅடியான கட்டிடம் என்பன 2012 ஆம் வருடத்திலிருந்து 7 வருடங்களுக்கும் அதிகமாக விளைவற்றதாகக் காணப்படுகின்றது. | இக் கட்டிடத்தைப் பயன்படுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தற்போது உள்ள கட்டிடத்தை பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இரத்தினபுரிப் பிராந்திய அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த நூதன சாலைக்கென 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,251,498 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2 | தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் அறிவுறுத்தல்களுக் கமைய கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த | கட்டிட நிர்மாணங்கள் பூர்த்தியான பின்னர் உடனேயே பயன்படுத்து வதற்கான |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கு மேலாக விளைவற்றதாகக் காணப்பட்டதுடன் மற்றும் கணக்காய்வு நடாத்தப்பட்ட திகதி வரையில் நூதனசாலை திறக்கப்பட்டிருக்கவில்லை. | போதிலும் புகைப்படக் கருவி அமைப்பு, மின்சார விளக்குகள் என்பவற்றை நிறுவுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நூதனசாலையைத் திறப்பதில் தாமதம் ஏற்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களுகங்கை ஹெரணியாவக்க எனுமிடத்தில் ரூபா 12.5 மில்லியனுக்கான இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டம் பொருட்டு 2017 ஆகஸ்ட் 11 ம் திகதி முயற்சியாளரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் சுற்றுாடலுக்கான பரிந்துரைகள் மற்றும் அகழ்வதற்கான ஏனைய அரச நிறுவனங்களின் அனுமதிகள் என்பன பெறப்படுவதற்குத் தவறியமையால் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரையில் இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அங்கீகாரமற்ற அகழ்தலைத் தடுப்பதற்கான முறையாகவே இச் செயற்றிட்ம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 14(ஊ)(எ) மற்றும் 14(ஒ) இன் பிரகாரம் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட அடிப்படைப் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் செயற்றிட்மாகவும் இச் சட்டத்தில் உள்ள நிதிக் குறிக்கோள்களுக்கும் உடன்பட்டதாக திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் தேவையான அங்கீகாரங்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | காலதாமதமின்றி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) எகலியகொடை அலுவலக கட்டட நிர்மாணம் 2018 செப்தெம்பர் 10 இல் பூர்த்தியாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத்திகதியான 2019 மே 15 வரையில் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை மற்றும் பல்வேறுபட்ட காரணங்களால் நிர்மாணத்திற்கான காலம் 4 | தற்போது 2019 மே 26 ஆந் திகதி வரை நீடிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தை வடிவமைக்கும் போது அவசரமாக வெளியேறுவதற்கான படிக்கட்டிற்கான கட்டிடக்கலை திட்டமானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களினால் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. நிர்மாணவேலைகளின் | காலதாமதமின்றி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்களால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட ஒரு காரணமோ அல்லது அனுமதியோ இன்றி மேலும் 4½ மாதங்களாக அதிகரிக்கப்பட்டிருந்தது. | தொடக்கத்தின் போது இத்திட்டம் தொடர்பாகப் பொதுமக்களின் பலத்த எதிர்ப்புக்கள் காரணமாக இக் குறிப்பிட்ட திட்டத்தை திருத்தியமைக்க வேண்டியதாயிற்று. காலநீடிப்பு மற்றும் கொடுப்பனவுகள் என்பன ஒப்பந்தத்திற்கமைவாகவே செய்யப்பட்டன. | |

## 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் பிரிவிற்கமைய மற்றும் பாதீட்டின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பதுடன் ஆளுகை சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் பிரமாணத்திற்கிணங்க 2018 ஆம் வருடத்திற்கான பெறுகைத்திட்ம் தயாரிக்கப்பட்டிருந்தது. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டமிட்டவாறு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் வருடத்திற்கான பெறுகைத் திட்டத்திற்கமைய செயற்படுத்தப்பட வேண்டியதான தலைமை அலுவலகத்திற்கான கட்டமொன்று நிர்மாணித்தல், கதிர்காமத்தில் விடுமுறை பங்களா ஒன்று நிர்மாணித்தல் மற்றும் சர்வதேச இரத்தினக்கல் ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்கான உபகரணங்கள் கொள்வனவு என்பவற்றுக்காக முறையே ரூபா 640 மில்லியன், ரூபா 35 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் தொகையானது ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் கணக்காய்வு திகதி வரையில் இவை தொடர்பான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரத்தினபுரியில் தெமுவாவக்கவிலுள்ள மாணிக்க தெருக்களை சர்வதேச இரத்தினக்கல் மையமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திட்டமிட்டவாறு காணி கொள்வனவு பூர்த்தி செய்யப்படவில்லை மற்றும் வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. | அதிகாரசபையின் தலைமையக கட்டிடத்தை கட்டத் தொடங்குவதற்கான தேவையான முறையான அங்கீகாரம் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2017 நவம்பர் 30 ஆம் திகதி உரிய அமைச்சரவைப் பத்திரம் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தீர்மானம் இன்னும் அதிகாரசபையினால் பெறப்படவில்லை. எதிர்காலத்தில் எடுக்கப்படும் அமைச்சரவைத் தீர்மானத்தில் பிரகாரம் வேலைகள் செயற்படுத்தப் படுவதுடன் 2017 யூலை 31 இல் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. | மூலதனச் செயற்றிட்டங்களை கால தாமதமின்றி நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டத்தின் பொருட்டு பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்புச் சேவையை பெறாது ஹத்துவாவத்த மற்றும் பொகவந்தலாவ செயற்றிட்டங்கள் பொருட்டு வேறு நிறுவனத்திடமிருந்து பாதுகாப்புச் சேவையைப் பெற்றமையுடன் முறையே 8 மாதங்கள் தொடர்பாக ரூபா 3,526,038 மற்றும் 16 மாதங்கள் தொடர்பாக ரூபா 1,375,000 ஆன தொகையும் ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பாதுகாப்புச் சேவைகளுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதி லேற்பட்ட தாமதம் என்பதை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டே பாதுகாப்புச் சேவைகள் கொடுக்கப்படு மென்பதை அறியத்தருகின்றேன். | ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு நிறைவேற்றுத் தரப்பதவிகளிலான வெற்றிடங்களை ஈடுசெய்வதற்கு ஏனைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிரந்தர அலுவலர்கள் ஆட்சேர்க்கப் பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் பதவிக்காக (ஏற்றுமதிச் சேவை மற்றும் ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல்) இருதடவைகள் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட போதிலும் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் நியமனத்தை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர். பணிப்பாளர் (காணி, அகழ்வாராய்ச்சி மற்றும் சுற்றாடல்) ஒருவர் வேலையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டமையால் அக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். முகாமைத்துவ சேவைகளிடமிருந்து அனுமதி பெறத்தவறியமையால் உதவிப் பணிப்பாளரிற்கான (சட்டம்) பதவி வெற்றிடமாக இருந்ததுடன் நிறுவனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட அலுவலர் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக உதவிப்பணிப்பாளரிற்கான (பெறுகை) நியமனம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் பிரதான நோக்கங்கள் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையுடன் தங்க இறக்குமதியாளர்களுக்கான வசதிகளை வழங்குதல், இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணப் பரிமாற்றத்தை எளிதாக்கலும் மேம்படுத்தலும் ரட்ணதீப வியாபார நிலையங்களை தொழிற்படுத்தல் நிர்வகித்தலும் போன்ற நோக்கங்களை அடைவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் பிரதான நோக்கமாகிய ஏற்றுமதி யாளர்களுக்கான வசதிகளை வழங்குதல் பொருட்டு நிதி அமைச்சின் அனுசரணையுடன் தற்போது அமுலில் உள்ள NBT 2% ஆன வரியை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீள் ஏற்றுமதிக்காக கொண்டு வரப்படும் கடினமான இரத்தினக்கற்கள் பொருட்டு வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நிதிச் செலவுகளையும் வருமானத்தையும் உருவாக்காமையால் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. இரத்தினக்கல் மற்றும் ஆபரண மேம்படுத்துகைக்காக WTC வர்த்தக வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. | முக்கிய நோக்கங்களை நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் அந்நோக்கங்களை அடைவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய சுற்றாடல் பாதுகாப்புச் செயற்றிட்டங்களை நடாத்துதல், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மேம்படுத்தல் மற்றும் மீள் ஏற்றுமதியின் கீழ் வெளிநாடுகளைச் சம்பந்தப்படுத்தும் 5 செயற்றிட்டங்கள் இரத்தினக்கற்களுக்கான சந்தைகளை ஸ்தாபித்தல், தலைமைக் காரியாலயத்தின் ஆய்வுகூடம் மற்றும் மதிப்பீட்டு ஆய்வுகூடங்களை | வருடாந்த அறிக்கை தயாரித்தல் மற்றும் வருடத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்கள் தயாரித்தல் என்பன பணிப்பாளர் சபையின் அனுமதியுடனேயே செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டளவில் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கைத் திட்டமானது நடைமுறைக்கு அமைவாக இருப்பதுடன் அதன் இலக்குகளை அடைவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேம்படுத்தல், கண்டியில் 2 புதிய ஆய்வுகூடங்களை நிறுவுதல், அதிகார சபையினால் ISO தரச் சான்றிதழ், ஆபரண மதிப்பீட்டுப் பிரிவிற்கான சர்வதேச உறுப்புரிமை மற்றும் சர்வதேச சான்றிதழ்களைப் பெறுதல் இணையத்தள அடிப்படையிலான சர்வதேச ஏலவிற்பனை முறையினை அறிமுகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ரூபா 326,938,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இந் நடவடிக்கைகள் ஆண்டின் போது செயற்படுத்தப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் வரவு செலவுத்திட்டத்தின்படி இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலாளரை மதிப்பீடு செய்வதற்காக ரூபா 10,000,000 ஆனது ஒதுக்கப்பட்டு நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது பயன்படுத்தப்படாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற வணிகர்களிடமிருந்து ரூபா 15,850,000 ஆன நன்கொடைகள் பெறப்பட்டு அதிகார சபையின் தங்க விழாவுடன் இணைந்து கைத்தொழிலாளர்களை நினைவு கூருவதற்கான விழா ஒன்று நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சி 23 நவம்பர் 2018 இல் நடாத்தப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபையின் ஒப்புதல் அனுமதியானது 14 திசெம்பர் 2018 இலேயே வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டியின் 3.4 (ஆ) பிரிவிற்கு முரணாக தங்க விழா விருது வழங்கும் வைபவத்திற்கான அனைத்து பொருட்கள் சேவைகளின் | இந் நோக்கத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையின் நிதி நிலைமை காரணமாகத் தலைவர் கைத்தொழிலாளர் களின் ஒத்துழைப்புடன் இதைச் செய்யத் திட்டமிட்டார். இச் செயற்திட்டத்திற்கு நிதி உதவிகளை செய்வதற்கு கைத்தொழிலாளர்கள் இணங்கி இருந்தனர். இதற்குப் பின்னர் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கும் நோக்கில் 2018 ஒக்டோபர் 02 இல் தகவல் பத்திரமாக சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 80 விருதுகள் விருதுவிழாவிற்காகவும் ஒரு விருது மதிப்பிற்குரிய சனாதிபதிக்குமாக 81 விருதுகளைத் தயாரிப்பதற்கான வேண்டுகோள் விடுவிக்கப் பட்டிருந்தது. எனினும், 23 முன்னைய தலைவர்களுக்கும் வழங்குவதற்காகப் பின்னர் அறிவிக்கப் பட்டமையால் இதன் பிரகாரம் வேண்டுகோள் 100 ஆக அதிகரிக்கப்பட்டது. இருந்த போதிலும் நிலையற்ற | வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் குறிப்பிட்ட அனுமதிகள் ஆயத்தங்கள் என்பவற்றுக்கு இணங்கி நடப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வனவுகள் சந்தை விலை மனுகோரல் முறையின் கீழ் பெறுகைகள் பெறப்பட்டிருந்தன. விருது விழாவிற்காக தேவைக்கு அதிகமாக 21 கிண்ணங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 183,600 பெறுமதியான 17 கிண்ணங்கள் விளைவற்றதாகக் காணப்பட்டிருந்தன. | அரசியல் சூழல் காரணமாக முன்னைய தலைவர்களுக்கான விருது வழங்குதல் நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வில்லை. | |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செயலாற்ற வேண்டிய போதிலும் மற்றும் அதிகார சபை தமது விடயப்பரப்பிற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குறித்த எவ்வித நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் செயற்படுவதற்காக இவ் விடயம் சம்பந்தமாக விசேட அவதானம் செலுத்தப்படுவதுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்க விருப்புகிறேன். | குறிப்பிட்ட நோக்கங்களையும் இலக்குகளையும் அடையாளங் காண்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |